வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டம் - கூறு ‘‘பீ’’ இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆந் திகதிய 2626 - எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 (அ) பிரிவு மற்றும் 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 0246 – எஸ்ஆர்ஐ ஆம் மானிய உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 (அ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தர உத்தரவாதப் பிரிவு என்பன செயற்திட்டத்தின் கூறு ‘‘பீ’’ இன் அமுலாக்கல் முகவர்களாக உள்ளனர். அடிப்படை பயன்பாடுகளை மீளமைப்பதன் மூலம் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வாதாரம், பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான சேவைகள் என்பவற்றினை மீளமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. உடன்படிக்கைகளின் பிரகாரம் ஆக்கக்கூறு ‘‘பீ’’ இன் மீள ஒதுக்கப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 31.17 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 26.29 மில்லியன் அல்லது 84 சதவீதம் கடனாகவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் சிவில் வேலைகளிற்காக ஐ.அ.டொலர் 1.50 மில்லியன் மானியமாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 யூன் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய

கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1. நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த

ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 சனவரி 28 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்த ரூபா 7.38 மில்லியன் செலவிடப்படாத காசு மீதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளளிக்கப்பட்ட மீதியை உறுதிப்படுத்துவதற்கான சான்று கணக்காய்விற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 செலுத்தவேண்டியவைகள்

மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு 2013 இல் பூர்த்தி செய்யப்பட்ட 02 நிர்மாண வேலைகளின் மீதான ரூபா 10.95 மில்லியன் கூட்டுத்தொகையான பிடிகாசினை செயற்திட்ட இறுதிக் காலத்திலும் கூட விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | | | | | | | |
| - கடன் | 26.29 | 3,437.42 | 2,178.95 | 10.87 | 1,413.70 | 25.19 | 3,.275.54 |
| - மானியம் | 1.50 | 196.13 | - | - | - | 1.40 | 180.81 |
| இலங்கை அரசாங்கம் | 3.38 | 442.59 | 544.80 | 0.93 | 120.90 | 1.69 | 219.73 |
| மொத்தம் | 31.17 | 4,076.14 | 2,723.75 | 11.80 | 1,534.60 | 28.28 | 3,676.08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டக் கூறு - பீ க்கான ரூபா 4,076 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 31.17 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 90 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,676 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 28.28 மில்லியன் செயற்திட்ட இறுதிக்காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 2,022.7 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 15.47 மில்லியன் மற்றும் ரூபா 1,263.04 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 9.66 மில்லியன் ஒதுக்கீடுகள் முறையே இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சிவில் வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டதுடன் இதில் முறையே ரூபா

1,595.73 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 12.37 மில்லியன் மற்றும் ரூபா 991.02 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 7.62 மில்லியன் மாத்திரமே குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 604.34 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 4.64 மில்லியன் பெறுமதியிடப்பட்ட செலவு மீளளிப்பு விண்ணப்பங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ரூபா 24.89 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 314,740 கடப்பாட்டுக் கட்டணங்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகள் தொடர்பாக கடன்வழங்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், யாழ்ப்பாணக் குடாநாட்டில் 2012 யூன் அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த மின்சார பரிமாற்ற வரிசைகளின் மீளமைப்பு 2014 செப்தெம்பர் மாதத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 160,000 வீடுகளில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 120,000 வீடுகளுக்கு மாத்திரமே மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்பட்ட வடக்கு மாகாணத்திலுள்ள பருத்தித்துறை மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஈச்சலம்பற்று என்பவற்றின் நீர் வழங்கல் திட்டங்களின் நிர்மாண வேலைகள் அத்தகைய வேலைகளை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக முறையே 18 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் காலதாமதங்களுடன் 2014 செப்தெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 3.3 வழமைக்குமாறான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தர உத்தரவாதப் பிரிவால் சிறிய நீர்ப்பாசன வேலை நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 625.03 மில்லியன் தொகையானது செயற்திட்ட நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 இல் இழக்கப்பட்ட ரூபா 67,863 பெறுமதியான அலுவலக உபகரணம் பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் செயற்திட்டத்தின் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டிருந்தது.

## 3.4 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்

செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அனைத்து தகுதியான செலவினங்களும் 2015 திசெம்பர் 31 இற்கு முன்னர் கோரப்பட்டு மீளப்பெறப்பட்டிருந்தன. எனினும், 2016 ஏப்ரல் 30 வரையிலும் ஆலோசனையாளர்களால் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 224 நிலையான சொத்து உருப்படிகளில் 28 நிலையான சொத்து உருப்படிகள் மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்படுத்தல் முகவர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. மேலும், மிகுதி சொத்துக்களை உரிய தரப்பினர்களுக்கு கையளிப்பதற்கும் முடிவுறுத்தல் கணக்குகளை தயாரிப்பதற்கும் செயற்திட்ட நிறைவேற்றல் முகவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.